# எழுதிப் பழகுவோம்!

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல்.**

## 1. பழங்கள்

1. பழங்கள் உடலின் ஆரோக்கியத்திற்கு துணை செய்கின்றன.
2. பழங்கள் இனிப்புச் சுவையுடையதாக இருக்கும்.
3. எனக்குப் பிடித்த பழம் பலாப்பழம்.

## 2. பசு

1. பசு பண்ணை விலங்குகளில் ஒன்று.
2. பசுவினை இந்துக்கள் தெய்வமாகக் கருதுவர்.
3. பசுவிலிருந்து கிடைக்கும் பால் நமது உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தைத் தரும்.

## 3. குடி

1. தண்ணீர் அதிகமாக குடிக்க வேண்டும்.
2. வெப்பம் தாங்க முடியாமல் மோர் குடித்தேன்.
3. மருத்துவர் இளநீர் குடிக்க கூறினார்.

## 4. கடல்

1. கடலில் பல உயிரினங்கள் வாழ்கின்றன.
2. கடல் நீர் உப்பாக இருக்கும்.
3. கடலில் அலை எப்போதும் வந்து கொண்டே இருக்கும்.

## 5. பாட்டி

1. பாட்டி எனக்கு புத்தாடை வாங்கித் தந்தார்.
2. பள்ளி விடுமுறையில் நான் பாட்டி ஊருக்குச் செல்வேன்.
3. பாட்டி என்னை சுற்றுலா அழைத்துச் சென்றார்.